

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், டாக்டர். அம்பேத்கார் நகரில் அமைந்துள்ள சமுதாய நலகூடம் மேல் தளத்தில், பொது நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் செலவில், கட்டப்படவுள்ள உணவு கூடத்திற்கு குத்துவிளக்கேற்றி வைத்து, இன்று (03.09.2016) அடிக்கல் நாட்டி, பணிகளை துவக்கி வைத்தார்.

செ.வெ.எண்: 600/2016 நாள்: 03.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,
மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள்,
இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பிலான பல்வேறு
வளர்ச்சிபணிகளுக்கு அடிக்கல் நாட்டியும்,
ரூ. 3 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய பயணிகள் நிழற்குடையினை
இன்று (03.09.2016) திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், டாக்டர். அம்பேத்கார் நகரில் அமைந்துள்ள சமுதாய நலகூடம் மேல் தளத்தில், பொது நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் செலவில், கட்டப்படவுள்ள உணவு கூடத்திற்கு குத்துவிளக்கேற்றி வைத்து, அடிக்கல் நாட்டியும், முருங்கவிளை தெருவில் பொது நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் செலவில் அலங்கார கற்கள் (பேவர் பிளாக்) அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி, பணிகளை இன்று (03.09.2016) துவக்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து அளந்தகரை கபாடி மைதானத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, விளையாட்டு வீரர், வீராங்கனைகளிடம் குறைகள் ஏதேனும் உள்ளதா என்று கேட்டறிந்தார். பின்னர் மாநில நிதிகுழு மானியத்திலிருந்து, அத்திக்கடை (தெற்கு சூரங்குடி) முஸ்லீம் சமுதாய தெருவிற்கு ரூ. 5 இலட்சம் செலவில் பல்நோக்கு கட்டிடம் கட்டிட அடிக்கல் நாட்டியும், ரூ. 2 இலட்சம் செலவில் கீழ்பால்கிணற்றான்விளை பகுதியில் அலங்கார கற்கள் (பேவர் பிளாக்) அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியும், பறக்கை ஊராட்சி, மதுசூதனபுரம், சிவதுர்க்கா மருத்துவமனை அருகில் ரூ. 3 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடை திறந்து வைத்து, பேசும் போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், இன்று பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகள் துவக்கி வைக்கப்பட்டது. மேலும் பொது மக்கள் கடும் வெயிலிருந்து பாதுகாக்கின்ற வகையிலும், அவர்கள் உட்காருவதற்கு ஏதுவாக மாநில நிதிகுழு மானிய திட்டத்திலிருந்து கட்டப்பட்டுள்ள புதிய பயணிகள் நிழற்குடை இன்று (03.09.2016) திறந்து வைத்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இதைபோல் ஒவ்வொரு துறையிலும் செயல்படுத்தப்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் திட்டங்களை பொதுமக்களாகிய நீங்கள் முழுமையாக பெற்று பயன்பெற வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. எம்.எஸ். சாரதாமணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி. ஜாண்சிலின் விஜிலா, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. பகவதிபெருமாள், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், திரு. கனகராஜன், திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. நாஞ்சில் சந்திரன், மௌலி யூசப் உசைன், திருமதி. லீலாவதி பாஸ்துரை, திரு. அஸ்ரக், திரு. ஜமால், திரு. வேல்முருகன், திரு. என். தங்கப்பன், திரு. ரவிச்சந்திரன், திரு. மணி, திரு. சுந்தர், திரு. பார்த்திபன், திரு. சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.